# முடிவில்லாப்பயணத்தில்

எஸ். எம். கோபாலரத்தினம்

ரஜனி பதிப்பகம்
கொழும்பு - பாரிஸ்

முடிவில்லாப் பயணத்தில்
மரணித்த
அனைத்துப்
போராளிகளுக்கும்...

விரைவில் வெளிவருகிறது

எஸ். எம். கோபாலரத்தினம்
எழுதும்

# " ஈழ மண்ணில் ஒரு இந்தியச் சிறை "

( இந்திய 'அமைதிப் படையினரால் சிறைவைக்கப்பட்டிருந்த நினைவுகளை எழுதுகிறார்.)

# எஸ். எம், கோபாலரத்தினம் முடிவில்லாப்பயணத்தில்...

## 1

பகவன் ஆர்.சிங் என்ற ஒரு பத்திரிகையாளர் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போராளிக்குழுவொன்றுடன் வள்ளத்தில் வந்து பார்த்துத் திரும்பி தமது அனுபவத்தை 'தீ வீக்' என்ற சஞ்சிகையில் எழுதியிருந்தார். இந்தக் கட்டுரையை யாழ்ப்பாணத்தில் அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்த 'ஈழமுரசு' நாளிதழ் தொடர்ந்து வெளியிட்டு வந்தது. இது 1985 ஆம் ஆண்டின் பிற்பகுதித் தொடக்கத்தில் இச்சமயத்தில் 'ஈழமுரசு' பத்திரிக்கையை நடாத்தி வந்த "சாயி அட்வட்டைசிங் ஏஜென்சீஸ்" என்ற நிறுவனத்தின் அதிபர் மயில் அமிர்தலிங்கம் என்னை ஆசிரியராக நியமித்து "செய்திக்கதிர்" என்ற பெயரில் மாதமிருமுறை வெளிவரும் சஞ்சிகையொன்றை ஆரம்பித்திருந்தார். பகவன் ஆர். சிங்கின் " யாழ்ப்பாண யாத்திரை" கட்டுரையின் சில பகுதிகளை நானும் செய்திக்கதிரில் வெளியிட்டேன். போராளிக்குழுக்களின் படகில் ஒரு தடவையாவது இந்தியாவுக்குப் போய்வரவேண்டும் என்று எனக்குள் ஏற்கனவே இருந்த ஆசை சிங்கின் கட்டுரையைப் படித்ததும் மேலும் வளர்ந்தது.

பலரிடமும் பல தடவைகள் சொல்லியும் நிறைவேறுவதாகக் காணோம். இச்சமயத்தில் 'எனது நீண்டகால நண்பனும் பிரபல பத்திரிகையாளனும் "சற்றடே றிவியூ" பத்திரிகையின் ஆசிரியருமான காமினி நவரத்தினா சென்னைக்குச் சென்று போராளிக்குழுக்கள் சிலவற்றைச் சந்தித்துத் திரும்பி "சற்றடே றிவியூ"வில் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தார்.

அது மட்டுமல்ல ஜெர்மனிக்கு 1980 ஆம் ஆண்டில் நாங்கள் விமானமேற்றி அனுப்பிய எங்கள் மூத்தமகனைச் சென்னையில் சந்தித்துப் பேசியதாகவும் காமினி என்னிடம் சொன்னார். எனக்கு இந்தியா செல்லவேண்டுமென்ற ஆசை அதிகரித்தது. 'சற்றடே றிவியூ' வில் கவிஞர் மகாகவியின் மகன் கவிஞர் சேரன் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். போராளிகள் படகில் நான் இந்தியா செல்வதற்கு உதவமுடியுமா ? என்று சேரனிடம் கேட்டேன். ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். 1985 ஆம் ஆண்டு நவம்பர் ஆறாந்தேதி காலையில் வீட்டுக்கு வந்த சேரன் அன்று நண்பகல் ஆயத்தமாக இருக்கும்படியும் மாலையில் வள்ளத்தில் பயணமாகலாமென்றும் சொல்லிவிட்டுச் சென்றார். 'செய்திக்கதிர்' அடுத்த இதழுக்கான ஆயத்தங்கள் பெரும்பாலும் முடிந்திருந்தன. மயில் அமிர்தலிங்கத்திடம் நான் வள்ளத்தில் இந்தியா போக விரும்புவதாக ஏற்கனவே கூறியிருந்தேன்.அன்று பயணமாவதகாச் சொல்லிவிட்டு இலங்கை இருநூறு ரூபாயை யாழ். நவீன மார்க்கட்டிலுள்ள ஒரு கடையில் கொடுத்து இந்திய நூறு ரூபாய் நோட்டு ஒன்றும் வாங்கிக் கொண்டேன். இதற்கிடையில் வீட்டுக்குச் சமீபத்திலுள்ள ஒரு கடையில் எனது பயணத்துக்கு உதவியாக நிறைய சோப்புக்கள் வாங்கி எனது மனைவி உடுப்புகளுடன் பாக்கில் அடுக்கி வைத்திருந்தார். அன்று நண்பகல் மோட்டார் சைக்கிளில் வந்த சேரன் என்னை ஏற்றிக்கொண்டு மாதகலுக்குச் சென்றார். மாலை நான்கு மணிக்கெல்லாம் மாதகல் வந்து சேர்ந்துவிட்டோம். அங்கு ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்று ஒரு நண்பரை அறிமுகம் செய்து வைத்தார். மாலை ஆறுமணிக்கு வள்ளத்தில் புறப்படலாமென்றார். வள்ளத்தில் யாருடனும் எதுவும் பேசவேண்டாமென்றும் எனக்குச் சொன்னார்கள். வள்ளத்தில் சாரம் கட்டிக் கொண்டு தான் பயணம் செய்யவேண்டும். வெள்ளை சேட் அணிந்திருக்கக்

கூடாது. வள்ளத்துக்குப் போகு முன்பு எனக்குத் தேவைப்படும் என்று ஒரு மருந்துப் போத்தல் (சாராயம்) வாங்கி எனது பாக்கில் வைத்து விட்டார் சேரன். மாலை ஐந்தரை மணியளவில் கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். வள்ளத்தில் எங்கிருந்து ஏறினேன் என்பது பற்றியோ எந்தக் கரையில் இறங்கினேன் என்பது பற்றியோ யாருக்கும் எப்போதும் சொல்லக்கூடாதென்ற மற்றொரு கட்டளை- நிபந்தனை கோரிக்கை. கரையிலிருந்து வள்ளம் புறப்படுவதற்கு முன்பு மற்றொரு வள்ளம் வேகமாகச் சென்றது. வள்ளத்தில் நான்கு சிறுவர்கள் மற்றும் இரு இளைஞர்கள், ஏறிக்கொண்டனர். என்னையும் ஏறச் சொன்னார்கள். ஓட்டி (படகோட்டி)யின் உதவியாளர் இருவரும் ஏறியதும் ஓட்டி வள்ளத்தின் அருகே வந்து நின்று கடலில் நோட்டம் விட்டார். "அடே வீரசூரியா' வர்ராண்டா" என்றார் ஓட்டி. எல்லோரும் அத்திசையையே பார்த்தனர். 'வீரசூரியா' என்பது இலங்கை கடற்படையைச் சேர்ந்த விரைவு படகு ! இதே சமயம் எங்களுக்கு முன்புறப்பட்டு வேகமாகச் சென்ற வள்ளம், சென்ற வேகத்தில் திரும்பி வந்தது .வீரசூரியாவைக் கண்டதும் அந்த வள்ளம் கரைக்குத் திரும்பிவிட்டது. நமது வள்ளத்தில் இச்சமயத்தில் மேலும் இரண்டு பொதிகள் கொண்டு வந்து ஏற்றப்பட்டன. வீரசூரியா மேற்குத் திசையிலிருந்து கிழக்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. எங்கள் வள்ளம் நின்ற இடத்திலிருந்து நேரே கடலின் மத்தியில் வீரசூரியா சென்று கொண்டிருந்ததும் "நாங்கள் கரையைப் பிடித்துப் போவோம்" என்று கூறியபடி ஓட்டி வள்ளத்தில் ஏறினார். வள்ளம் புறப்பட்டது. மேற்குத் திசையில் கரையோரமாக வள்ளம் நீண்ட நேரம் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. கிழக்குத் திசையை நன்கு கவனித்துக்கொண்டிருந்த ஓட்டி இனி வடக்கே திருப்பு என்று சுக்கான் பிடித்துக்கொண்டிருந்தவர்க்குப் பணித்துவிட்டு இதர இரண்டு எஞ்சின்களையும்

முடுக்கிவிட்டார். வள்ளம் வேகமாகச் செல்லத்
தொடங்கியது. சிறிது தூரம் சென்றதும் வள்ளத்
லிருந்த நான் மேலே மேலே எழுந்து விழத்தொடங்
கினேன். வள்ளத்திலிருந்த கம்பு என்கையில் பற்றிக்
கொண்டு வெளியே கடலில் நான் போய் விழுந்தி
டாதவாறு காப்பாற்றியது. நல்ல இருள். வள்ளம்
நீரைக் கிழித்துச் செல்லும்போது தெரியும் நீரின்
நுரை மட்டும் மோட்டார் வாகனத்தின் முன்னே
யுள்ள லைட் வெளிச்சம் போல் தெரிந்தது. வானத்
தில் சில நட்சத்திரங்கள் கொஞ்ச நேரம் மட்டும்
தெரிந்தன. வள்ளம் சென்ற வேகத்தில் கடலலை
கள் சீறி எழுந்து வள்ளத்தில் இருந்த எங்கள் மீது
அடிக்கடி 'சோ' என்ற இரைச்சலுடன் குளிப்பாட்
டிக் கொண்டிருந்தது. சுமார் இரண்டு மணிநேரம்
கழிந்ததும் இலேசாக மழைத் தூறல் விழத்தொடங்
கியது. வானத்திலிருந்த ஒருசில நட்சத்திரங்களும்
மறைந்துவிட்டன. கடல் நீருடன் மழைநீரும் உடலில்
விழுந்ததும் நடுங்கத் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு
பெரிய அலைக்கும் வள்ளம் கடலிலிருந்து மெலெ
ழுந்து மீண்டும் கடலில் வந்து விழும். வள்ளம்
மேலெழும்போது நமது உடலும் வள்ளத்திலிருந்து
மேலெழும்பிக் கீழே விழுவதும் அதிகரித்துக்
கொண்டே இருக்கும். இதனால் சிலருக்கு வாந்தியும்
வரும். நல்லவேளை அன்று நாம் சென்ற வள்ளத்
தில் இருந்து சிறுபையன்கள் கூட வாந்தியெடுக்க
வில்லை. நடுக்கடலில் வள்ளம் போய்க் கொண்டி
ருந்தது. ஒவ்வொரு அலையும் படகில் மோதும்போது
ஏற்படும் சத்தம் வள்ளம் இதோ உடைந்துவிடப்
போகிறது என்ற அச்சத்தை ஏற்படுத்தும். ஓட்டியும்
உதவியாளர்களும் வள்ளத்தில் பின்பகுதியில் சுக்
கானுக்கு அருகிலும் சூழவும் இருந்திருக்கவேண்டும்.
அவர்கள் பற்றவைத்த சிகரெட் நெருப்பு வெளிச்சத்
தில் தான் அவர்கள் அங்கிருப்பது தெரிந்தது. அவர்
களுக்கும் எங்களுக்கும் இடையே நடுவில் பெரிய
மூன்று பிளாஸ்டிக் 'கான்களில்' வள்ளத்துக்குத்
தேவையான பெட்றோலோ டீசலோ நிரப்பியிருந்

தன. பின்புறத்திலிருந்து வந்த போத்தல் கிளாஸ் கலகலப்புச் சத்தங்களும் இடையே வந்த நெடியும் அவர்கள் குளிருக்கும் நெருக்கடிக்கும் தாக்குப் பிடிப்பதற்கு 'உஷார்' பானம் அருந்துகிறார்களென் பதை எனக்கு உணர்த்தியது. எனக்கும் குளிர் நடுக் கம்; எனது பாக்கை அவர்கள் வாங்கி வள்ளத்தின் அணியத்தின் கீழ் வைத்துவிட்டார்கள். அந்த நேரத் தில் அதைத் தேடி எடுக்கவும் முடியாது. யாரிடமும் கேட்கவும் கூடாது. 'பாக்' அருகிலிருந்தால்கூட எனது மருந்தை வெளியே எடுத்து வாயினருகே கொண்டு போகக்கூடிய நிலையிலா வள்ளம் போய்க்கொண்டிருக்கிறது?

நடுங்கிக் கொண்டே பயணத்தை தொடர்ந்தேன். கால்கள் நன்றாக விறைத்துப் போய்விட்டன. கட லில் ஓரிடத்தில் வெளிச்சம் தெரிந்தது. அது என்ன வெளிச்சம் என்ற ஆராய்ச்சி பின்புறத்தில் எழுந்தது. என் காதுகளில் விழுந்தன. இந்தியக் கடற்படைக் கப்பலாக இருக்கலாமென்றும் இந்திய மீன்பிடி றோலராக இருக்கலாமென்றும் பேசிக்கொண்டார் கள். இலங்கைக் கடற்படைக் கப்பலாக இருக்கலா மென்றும் இந்திய மீன்பிடி றோலராக இருக்கலா மென்றும் ஒரு குரல் கேட்டது. எங்கள் வள்ளத்தின் வேகம் சிறிது குறைக்கப்பட்டது. அந்த வெளிச் சத்தை நெருங்கிச் செல்வதா தூரவிலகிச் செல்வதா என்றும் ஆலோசனை நடைபெற்றது. அந்த வெளிச் சத்தை நெருக்கிப்பிடி என்று ஓட்டி கட்டளை பிறப் பித்தார். வள்ளம் வெளிச்சத்தை நோக்கி நெருங்கிச் சென்றது. இலங்கை கடற்படைப் படகு என்றால் என்ன நடக்கும் ? ஏதோ நடப்பதைப் பார்த்துக் கொள்வோம். இதுவும் நல்லதொரு அனுபவம் தானே! பத்திரிகைக்கு கட்டுரை கிடைக்கும் என்று அந்தப் பயங்கரச் சூழ்நிலையிலும் எனக்கே உரித் தான பத்திரிகைத்தனம் என்னை விடவில்லை! வெளிச்சத்தை நெருங்கியதும் அது இந்திய மீன்பிடி

றோலர் என்று கூறிய ஓட்டி சத்தமாகக் குரல் கொடுத்தார். பதிலுக்கு அங்கிருந்தும் குரல் வந்தது. மீண்டும் எங்கள் வள்ளம் வேகத்தை அதிகரித்தது. மழைத்தூறல் அதிகரித்தது. பின்னர் சற்று ஓய்ந்தது. என்னடா வெளிச்சம் ஒன்றையும்காணோம். தெற்காலை தள்ளி வந்திட்டமோ' என்ற ஓட்டியின் குரல் கேட்டது. வள்ளத்தின் வேகம் நன்றாகக் குறைக்கப்பட்டது. அந்தா கரை தெரியுது என்றும் அது கரையல்ல என்றும் பின்புறமிருந்து குரல்கள் ஒலித்தன. ஓரிடத்தில் வள்ளம் நிறுத்தப்பட்டது. இரண்டு மூன்று பேர் இறங்கிச் சிறிது தூரம் நடந்து சென்றனர். அது ஒரு திட்டி என்றும் கரைக்குச் சமீபத்துவிட்டதாகவும் சரியான திசையில் தான் தாங்கள் வந்து கொண்டிருப்பதாகவும் ஓட்டியும் உதவியாளர்களும் பேசிக் கொண்டார்கள். திட்டியில் இறங்கி நடந்தவர்கள் மீண்டும் வள்ளத்தில் ஏறியதும் மீண்டும் வள்ளம் புறப்பட்டு அதிவேகமில்லாமல் சென்று கொண்டிருந்தது. கரையில் வெளிச்சம் வைக்கச் சொல்லியும் சனியன்கள் வைக்காமல் விட்டுவிட்டான்கள் என்று ஓட்டி திட்டிக்கொண்டு வந்தார். சிறிது நேரத்தில் கரை வந்துவிட்டது. எல்லோரும் இறங்கி வள்ளத்தை தள்ளுங்கோ என்று ஓட்டி உத்தரவிட்டார்கள். வள்ளத்தையும் மணல் மேட்டுக்குத் தள்ளுவதில் ஈடுபட்டுக்கொண்டார்கள். கால்களிரண்டும் எனக்கு நன்கு விறைத்துவிட்டன; எழும்பவோ இறங்கவோ முடியவில்லை; உடல் கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. எம்முடன் வந்த சிறுவர்களில் ஒருவன் "ஐயா இறங்குங்கோ" என்று தனது ஒரு கையை நீட்டினான். "அவன் உதவியுடன் ஒருவாறு இறங்கிக் கொண்டேன். ஆசுவாசப்படுத்திக் கொள்ள நேரமில்லை. வள்ளத்திலுள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு போய் வாடிக்குள் வையுங்கோ என்று ஓட்டி கட்டளை. எல்லோரும் ஒவ்வொன்றாக எடுத்துச் சென்றனர். நானும் கையில் அகப்பட்ட ஒரு சிறிய பார்சலை எடுத்துக் கொண்டு வாடிக்குள் சென்றேன். இதற்குள் மண்டி

7



எண்ணெயில் எரியும் நீண்டதிரியுள்ள விளக்கை வாடிக்குள் ஓட்டி பற்றவைத்துவிட்டார். மழைவெள்ளம் வாடிக்குள் புகுந்திருந்தது. ஒரு மூலையில் பரண் கட்டி மூன்று நான்கு பேர் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தனர். வள்ளத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் வாடிக்குள் வெள்ளம் இல்லாத பிட்டியின் மீது வைக்கப்பட்டிருந்தன. மற்றவர்கள் பொருள்களை எடுத்து வருவதற்குள் நான் எனது பாக்கை தேடி அவசர அவசரமாகத் திறந்து சேரன் வாங்கித் தந்திருந்த மருந்துப் போத்தலைத் திறந்து இருட்டில் நின்றபடியே ~~வாயில்~~ ஒரு 'டோஸ்' போத்தலுடனேயே வாயில் ஊற்றிக் கொண்டேன். மருந்து உட்சென்றதும் குளிர் நடுக்கம் ஓடி மறைந்துவிட்டது ! உஷார் வந்துவிட்டது. பாக்கிலிருந்த சிகரெட் பெட்டியையும் தேடி எடுத்து ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டேன். பொருள்கள் யாவும் இறக்கப்பட்டு, வள்ளமும் கரையில் ஏற்றப்பட்டதும் "எல்லோரும் உங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு என் பின்னே வாருங்கள்; சுணங்கக்கூடாது" என்று ஓட்டி டோர்ச் லைற் வெளிச்சத்துடன் விரைவாக முன்னே நடக்கத் தொடங்கினார். மனைவி அடுக்கி வைத்த சோப் கட்டிகளின் பாரம் இப்பொழுதுதான் தெரிந்தது. பாக்கைத் தோளில் வைத்துக்கொண்டு வேகமாக நடந்தேன். அப்பிடியிருந்தும் நான் தான் கடைசி ஆள் !

எங்கும் சேறும் சகதியும் தண்ணீரும் அன்று கூட நல்லமழை பெய்திருக்கவேண்டும்; தமிழ்நாட்டுக்கே உரிய மணமும் மூக்கில் வந்து முட்டியது. கல்லு, முள்ளு, சேறு,சில இடங்களில் இடுப்பளவு நீரிலும் நடந்து நகருக்கு வந்து சேர்ந்தோம். அப்பொழுது சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணி. அசிங்கத்தையெல்லாம் கடந்து வந்துவிட்டோம். இப்பொழுது எப்படியாவது குளித்தேயாகவேண்டும்; மடம் மாதிரி இருந்த ஓர் விடுதிக்குள் எல்லோரும் நுழைந்தோம். சிலர் அடுத்த வளவுக்குள் சென்றார்கள். எட்டிப்

பார்த்தேன். கிணறு இருந்தது. அந்த நேரத்திலும்
குளித்துக்கொண்டிருந்தார்கள். எங்கள் வள்ளத்தில்
வந்தவர்களும் குளிக்கத் தயாரானார்கள். நானும்
துவாயை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக
கிணற்றடிக்குச் சென்று இரண்டு வாளி தண்ணீர்
எடுத்து ஊற்றினேன். மீண்டும் குளிர் நடுங்கத்
தொடங்கியது. எப்படியோ ஒருவாறு உடலைக்
கழுவிக் கொண்டு உடையை மாற்றினேன். குளி
ருக்கு மருந்து எனது பாக்கில் இருக்கிறது. வெளியே
எடுக்கமுடியாத சூழ்நிலை. "எதிரிலிருந்தும் தொடப்
பயந்தேனே" என்று என்.எஸ். கிருஷ்ணன் பாடிய
பாடல் தான் ஞாபகத்திற்கு வந்தது.
தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்த
சமயம். நள்ளிரவுக்குப் பின் கடைகள் பலவும் திறந்
திருந்தன. சில கடைகள் அலங்காரங்கள் செய்து
கொண்டிருந்தன. மற்றும் சில புடவைக்கடைகள்
அப்போது தான் ஒதுக்கிப் பூட்டத் தொடங்கியிருந்
தன. எனது பொக்கெட்டில் இருந்த சிகரெட்டும்
முடிந்துவிட்டது. பாக்கிலிருந்த மருந்துப் போத்த
லையும் எடுக்கமுடியாது. சுடச்சுட காப்பியாவது
குடிக்கலாமென்று வெளியே இறங்கி நடந்தேன்.
அருகிலேயே ஆவிபறக்க இட்லியும் தோசையும்
சாம்பார் பெருங்காய வாசனையும் என்னை கடைக்
குள் இழுத்தது. நோட்டம் விட்டேன் சுத்தமாக
இருந்தது. இரண்டு தோசையும் ஒரு இட்டிலியும்
காப்பியும் உள்ளே சென்றன. கையிலிருந்த நூறு
ரூபாய் நோட்டை மாற்றிப் பணம் கொடுத்துவிட்டு
ஒரு பாக்கெட் 'கோல்ட் பில்ட்ர்' சிகரெட்டும் வாங்
கிக் கொண்டேன். மீதிப்பணத்தை கவனமாக வைத்
திருக்கவேண்டும். மறுநாள் சென்னை போய்ச்சேரும்
வரை அந்தப் பணம் தான். மீண்டும் நாங்கள் வந்து
தங்கிய இடத்துக்குள் நுழைந்தேன். ஓய்ந்திருந்த
மழை இரைச்சலுடன் கொட்டத் தொடங்கியது.
விடுதி போலிருந்த இடத்தின் முன்பகுதியில் ஓலைக்
கூரையும் தட்டியும் கொண்ட இடத்தில் சிலர் படுத்து
உறங்கிக்கொண்டிருந்தனர். என்னுடன் வள்ளத்தில்

வந்த ஒருவர் மட்டுமே இன்னமும் உறங்காமல் உறங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டு பிடி பற்றிக் கொண்டிருந்தார். வள்ளத்தில் வந்த வேறு எவரை யும் காணோம். வள்ளத்தில் ஏறும்போது சேரனின் நண்பர் ஒட்டியை மட்டுமே அறிமுகப்படுத்தியிருந் தார். பயணம் தொடங்கி இங்கு வந்து சேர்ந்தது வரை யாருடனும் நான் பேசவில்லை. நேரத்தைப் பார்த்தேன். அதிகாலை இரண்டுமணி. இன்னம் குறைந்தது நான்கு மணிநேரத்தைச் சமாளித்தால் தான் அதிகாலை பஸ் நிலையத்தை தேடி சென் னைக்குப் பயணமாகலாம். உறங்குவதற்கு ஆயத்தப் படுத்திக் கொண்டவருக்கு அருகே போய் அமர்ந் தேன். என்னைக் கண்டதும் குளிச்சீங்களா ? சாப் பிட்டீங்களா? என்று விசாரித்தார். நான் நடந்தவற் றைச் சொன்னேன். அவர் சாப்பிட்டாரா என்று விசாரித்தேன். வந்ததும் வழமையாகச் செல்லும் இடத்துக்குப் போய் ஒரு கிளாஸ் அடித்துவிட்டு சாப்பிட்டேன். சரக்கு இல்லையாம் இல்லையென் றால் இன்னொரு கிளாஸ் அடிச்சிருக்கலாம் என்று அங்கலாய்த்தார். முதலிலேயே இவருடன் பேச்சுக் கொடுத்திருக்கலாமே என்று நினைத்துக் கொண் டேன். "ஒட்டி எங்கே என்றேன்"? அவர் எனது தம்பி தான். அவருக்கு இங்கே 'சின்னவீடு' இருக்கி றது. நாளை இங்கே வருவார் என்று பதிலளித்தார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு பாக்கைத் திறந்து எனது 'மருந்துப் போத்தலை' வெளியே எடுத்தேன். அவருக்கு மகா சந்தோஷம். ஆளுக்குக் கொஞ்சம் ஊற்றிக்கொண்டோம். காலையில் பஸ் நிலையத்துக்கு என்னைக் கூட்டிச் சென்று சென்னை பஸ் ஏற்றிவிடுவதாகவும் தம்பியாரின் வீட்டுக்குப் போய் மீண்டும் நான் ஊர்திரும்பும் பொழுது போவதற்கான ஒழுங்கு செய்து கொள்ள லாமென்றும் அவர் உறுதியளித்தார். ஒரு சொட்டு 'மருந்தின்' சக்தி தான் என்னே ! அருகே கிடந்த மோட்டார் வண்டிக் குஷன் சீற்றை எடுத்துப்

போட்டு அதில் சற்றே உறங்குமாறு சொன்னார்
நானும் அதில் நீட்டி நிமிர்ந்தேன். உறக்கம் வர
வில்லை. ஒரு லைற் மட்டும் எரிந்து கொண்டிருந்
தது. கொசுக்களும் இடையிடையே பதம் பார்க்கத்
தொடங்கின. இதனிடையே கைகளில் ஏதோ ஊர்
வது போல் தெரிந்தது. தடவி எடுத்துப் பார்த்தேன்.
மிகச்சிறய வண்டு போன்ற பூச்சிகள். இது என்ன
கைகால்களில் ஏதோ ஊருகிறதே என்றேன்- "அ
தொன்றுமில்லை இந்தப் பன்றியிலில் இருக்கிற
வண்டுப்பூச்சிகள்; ஒன்றும் செய்யாது" என்று சொல்
லிவிட்டு மறுபக்கம் புரண்டு படுத்தார். நான் உட
னேயே எழுந்துவிட்டேன். விடியும் வரை மீண்டும்
கடத்தினேன். இடையிடையே மழையும் கொட்டி
யது; மழை ஓய்ந்த நேரத்தில் விடியவிடியத் திறந்தி
ருந்த ஹோட்டலில் காப்பியும் குடித்துக்கொண்
டேன். நாங்கள் வந்து தங்கிய இடம் ஒரு போராளிக்
குழுவின் முகாம் என்பது அங்கு நடமாடிய இளை
ஞர்களின் பேச்சுக்களிலிருந்து தெரிந்துகொண்
டேன். எந்தக் குழுவின் முகாம் என்பது தெரிய
வில்லை. ஓட்டியின் தமையனார் குழுவினருக்குத்
தெரிந்தவன் என்று நினைத்துக் கொண்டிருக்கக்கூ
டும். யாரிடமும் எந்தக் குழுவின் முகாம் என்றும்
கேட்கக்கூடாது. இரவிரவாக கடும் மழையிலும் கூட
முகாமைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் பார்சல்கள்
சிலவற்றை 'ஜீப்'வண்டியில் ஏற்றிக்கொண்டு
எங்கோ போய்ப்போய் வந்து கொண்டிருந்தனர்.
விடிந்தது. ஓட்டியின் தமையனார் உறக்கத்திலிருந்து
எழுந்துவிட்டார். வள்ளத்தில் வந்தவர்கள் சிலரும்
வேறு சிலரும் முன்பக்கக் கொட்டிலில் கூடிவிட்ட
னர். இச்சமயத்தில் வாட்டசாட்டமான ஓர் இளை
ஞன் பின்புறத்தில் விடுதியின் முன்னே தோல்கூட்
டுடன் றிவால்வர் ஒன்றைக் கையில் வைத்தபடி
"யார் புது ஆட்கள் நிக்கினம்" என்று யாரிடமோ
விசாரித்தார். என்னைப் பார்த்துத்தான் அவர்
அப்படி விசாரித்தார்.

- எஸ். எம். கோபாலரத்தினம்

"அவர் ஓட்டியோட வந்தவர்" என்று அங்கிருந்த ஒருவர் கையில் றிவோல்வர் வைத்திருந்த இளைஞ ரின் கேள்விக்குப் பதிலளிக்குமுகமாக என்னைப் பார்த்துச் சொன்னார். "யார் என்றாலும் வந்தவர் களை அவரவர் போகவேண்டிய இடத்துக்கு அனுப் பாமல் ஏன் இங்கு வைத்துக்கொண்டிருப்பான்" என்று அந்த இளைஞர் கூறியதும், " வாங்க, தம்பி யைப் போய்ப் பார்த்துவிட்டு பஸ் நிலையத்துக்குப் போகலாம்" என்று சொல்லிக் கொண்டே ஓட்டி யின் தமையனார் எனது 'பாக்கை' கையிலெடுத்தார். நான் அவரைப் பின்தொடர்ந்தேன். சிறிது தூரம் சென்று சந்தியில் திரும்பியதும், கோவில் வீதியி லுள்ள ஒரு காப்பிக்கடையில் இருவரும் காப்பி சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டோம். சிறிது தூரத்தில் ரயில் நிலையத்தை அடுத்த குடியிருப்புக்களில் ஒரு வீட்டில் 'ஓட்டி' உறங்கி அப்பொழுது தான் விழித் திருந்தார். சென்னையிலிருந்து சில வாரங்களில் திரும்பி வந்தால் உங்கள் வள்ளத்திலேயே நாட்டுக்கு திரும்பிச் செல்லமுடியுமா? என்று கேட்டேன். நாங் கள் அடிக்கடி போய் வருவோம். நீங்கள் வாருங்கள் சமாளிக்கலாம்" என்று பதிலளித்தது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

சேரனின் நண்பர் என்னிடம் ' ஒரு கடிதம் தந்திருந் தார். அதில் முகவரியும் இருந்தது. ஓட்டியின் வீட்டி லிருந்து புறப்பட்டதும் "இது சிறிய நகரம் தானே இதையும் ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு பஸ் எடுத்துப் போய்விடுவேன் நீங்கள் உங்கள் அலுவல் களைக் கவனியுங்கள்" என்று ஓட்டியின் தமைய னாரிடம் விடைபெற்றுக் கொண்டேன். நண்பர் தந்த கடிதத்திலுள்ள முகவரிக்குச் செல்வது கஷ்ட மாக இருக்கவில்லை. பெரிய சிவன் கோவில். அதற்கு எதிரேயுள்ள வீதியில் இரண்டாவது வீடு. நண்பர் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கடிதத்தைக் கொடுத்தேன். எனக்கு இரண்டு மூன்று நாட்களா கக் கடுமையான காய்ச்சல் என்று சொல்லிக்

கொண்டே கடிதத்தைப் பிரித்துப் படித்தார். "அவங்கள் அனுப்பிய புத்தகப் பார்சலால் எனக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது" என்று சற்றுக் கோபமாகவே சொன்னார். எனக்கு இது ஒன்றும் தெரியாது. கடிதத்தைக் கொடுக்கச் சொன்னார். அவ்வளவு தான் என்று கூறிவிட்டு "கொஞ்ச நேரம் இந்த பாக் இங்கே இருக்கட்டும்". நான் கோவிலுக்கு போயிற்று வந்து எடுக்கிறேன் என்று புறப்பட்டேன். 'சரி' என்று சொன்னவர் மீண்டும் கட்டிலில் சரிந்தார். உள் அறைக்குள்ளிருந்து இரண்டு கண்கள் என்னை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்தேன். ஓட்டிக்குப் போல் இவருக்கும் இது சின்னவீடோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. இதனால்த்தான் என்னை இருக்கக்கூடச் சொல்லவில்லையோ என்றும் யோசனை தலை நீட்டியது. நமக்கெதற்குத் தேவையில்லாத ஆராய்ச்சி என்று எனக்குள் நானே சொல்லிக்கொண்~~டேன்~~. வெளியேறினேன் சிவன் கோவிலுக்குள் புகுந்தேன். பெரிய தீர்த்தக் கேணி நிரம்பி வழிந்தது. கரையில் சில ஆண்களும் பெண்களும் துணி துவைத்துக் குளித்துக் கொண்டிருந்தார்கள். முதலிரவு பெய்த மழையினால் கோயில் உள்வீதிகளில் ஆங்காங்கே வெள்ளம் நின்றது. பெரியகொடி மரம் ஒன்றும் உள்ளே மற்றொரு கொடிமரமும் இருந்தன. வீதிசுற்றி வந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டேன். பூஜைக்கு வெகுநேரமாகும் போல் தோன்றியது. நகரைச்சுற்றிப் பார்க்கலாம் என்று சிறு வீதிகளில் நடந்தேன். சுவர்களில் முந்தைய வருடம் நடந்த தேர்தலுக்கான கட்சிகளின் சுலோகங்களும் வேட்பாளர்களின் படங்களும் தான் ! சில ஒதுக்குப்புற வீதிகளில் கால் வைத்து நடப்பதும் கஷ்டம்; மூச்சுவிட்டு சுவாசிப்பதும் சிரமம் ! இது ஒரு கடலோரக் கிராமத்தின் பட்டினம். கள்ளக்கடத்தலுக்குப் பெயர் பெற்றது. இதுவே இங்கு நன்கு வளர்ச்சி பெற்ற தொழில் ! பஸ்நிலையம் சென்று விசாரித்தபோது காலை எட்டு மணிக்கு 'திருவள்ளுவர்' சென்னைக்குப் புறப்படு

வார் என்று சொன்னார்கள். அந்த நண்பரின் வீட் டுக்குச் சென்று 'பாக்கை' எடுத்துக் கொண்டு பஸ் நிலையம் வந்தேன்.
சரியாக காலை எட்டுமணிக்கு பஸ் நிலையத்தினுள் "திருவள்ளுவர்" நுழைந்தார். இரண்டு நிமிடங்களுக் குள் புறப்பட்டு விட்டார். சென்னைக்கு அச்சமயத் தில் அங்கிருந்து முப்பத்திரெண்டு ரூபாய் ஐம்பது பைசா தான் கட்டணம். முப்பத்தைந்து ரூபாய் கொடுத்தேன் கண்டக்டர் மீதிப் பணம் தரவில்லை; நானும் கேட்கவில்லை! நண்பகலில் சிதம்பரம் புதுச் சத்திரத்தின் முன்பாக பஸ் நின்றது. சாப்பாட்டுக் காக வண்டி இருபது நிமிஷம் நிற்கும் என்றார் கண் டக்டர். பயணத்தின் போது பொதுவாக நான் எதையும் சாப்பிட விரும்புவதில்லை; பச்சைத் தண் ணீர் குடிக்கவும் மாட்டேன். டீ அல்லது காப்பி தான் குடிப்பேன். புதுச்சத்திரத்தைப் பார்ப்போம். சிதம்பரத்து மண்ணிலும் கால் வைப்போம் என்று நினைத்துக் கொண்டு இறங்கி புதுச்சத்திரத்தின் உள்ளே புகுந்தேன். சாப்பாட்டு ஹோட்டல். மேசை யில் இடமில்லாமல் பலர் காத்து நின்றனர். வெள் ளைத் தளிசைகள்,பருப்புக்கறி, சாம்பார் ! வாசனை எனக்கு வித்தியாசமாக இருந்தது. சாப்பிட்டுப் பார்ப் போமா ! சற்று நேரம் நின்று இடம் பிடித்தேன். இரண்டு தளிசைகளும் எனக்கு அதிகம். அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்தேன். செலவு ஆக மூன்று ரூபாய் மட்டுமே ! எனக்கு ஆச்சரியம் !
சக பயணிகளிடம் விசாரித்து நான் போகவேண்டிய இடத்துக்குச் சமீபமாக சைதாப் பேட்டையில் நான் இறங்கியபோது இரவு சரியாக எட்டுமணி ! மழை இலேசாகத் தூற்றிக் கொண்டிருந்தது. இறங்கிய பஸ் தரிப்புக்குச் சமீபத்திலிருந்து ஒரு சிறிய ஹோட்டலுக் குப் போய் ஒரு காப்பி சாப்பிட்டுவிட்டு "ரெலி போன் இருக்குதா"? என்று கேட்டேன். மூன்றாவது கடைக்கு வழிகாட்டினார். காமினி சொன்ன ரெலிபோன் இலக்கம் இன்றும் மனப்பாடம் எண் களைச் சுழற்றி எனது மூத்த மகனை விசாரித்தேன்.

"அவர் போய்விட்டார்; நாளைக் காலையில் தான் வருவார்" என்று பதில் வந்தது. "அவருடைய அப்பா தான் பேசுகிறேன். இப்பொழுது தான் யாழ்ப்பா ணத்திலிருந்து வந்து சைதாப் பேட்டை பஸ் நிலை யத்தில் வந்திறங்கி நிற்கிறேன். மகனை எப்படியாவது தேடிப்பிடித்து இங்கே அனுப்பி வையுங்கள்; இல் லையேல் இந்த பிளாட்பாரத்தில் தான் நான் இர வைக் கழிக்கவேண்டியிருக்கும்" என்று சொன் னேன். "அப்பிடியானால் இன்னும் ஒரு அரை மணிநேரம் கழித்து போன் செய்யுங்கள்" என்று மறுமுனையில் பேசியவர் சொன்னார். பிளாட்பாரத் தில் நின்று வேடிக்கை பார்த்தபின் மீண்டும் போன் செய்தபோது "உங்கள் மகன் உங்களைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்" என்று பதில் கிடைத்தது. நிம்மதி !

ஆட்டோவில் வந்த மகன் இரண்டு மூன்று ரவுண் டுகள் பஸ்தரிப்பு நிலையத்தில் சுற்றி வந்து என்னை அடையாளம் கண்டு ஆட்டோவில் ஏற்றிச்சென் றான்.

கோடம்பாக்கத்தில் ஒரு வீட்டிற்குச் சுற்றுத்தூரத் தில் ஆட்டோவை நிறுத்தச் சொன்னான். மகன் என் பக்கம் திரும்பி, "அப்பா , உங்கள் நண்பர் இரத்தின சபாபதிக்கு கடுமையாக சுகவீனமுற்று நீண்டநாள் ஆஸ்பத்திரியிலிருந்த பின் நேற்றுத்தான் வீட்டுக்கு வந்திருக்கிறார்" என்றான். "அப்படியா , என்ன சுகவீனம் ?" என்று கேட்டேன். "வேறு என்ன அள வுக்கு மீறிய குடிதான் " என்று அவன் சொல்லி விட்டு, " அவருக்கு முன்னால் நீங்கள் குடிக்கக் கூடாது; அவருடன் எங்கேயும் தனியப் போகவும் கூடாது" என்று நிபந்தனை விதித்தான். இதற்கு ஒப்புக்கொண்ட நான், "கொஞ்சம் பொறு நன்றாகக் களைத்துப் போனேன்" என்று கூறியபடி பாக்கில் மிச்சமிருந்த போத்தலை எடுத்து சிறிது ஊற்றிக்கொ ண்டேன்.

இந்த இரத்தின சபாபதி பற்றிக் கொஞ்சம் சொல் லவேண்டும்; நான் வீரகேசரியில் சேர்ந்த சில மாதங்

களின் பின் வேட்டி கட்டிய ஒரு சிறுவன் கையில் சில பேப்பர்கள் பேனாவுடன் அடிக்கடி ஆசிரிய பகுதிக்கு வருவான். தான் ஒரு சஞ்சிகை வெளியிடப் போவதாகச் சொல்லுவான். அதற்கு 'மணிக்கொடி' என்று பெயரிட்டிருப்பதாகவும் 'சுதந்திரன்' அச்சகத்தில் தான் அச்சிடப் போவதாகவும் இதற்கு 'சுதந்திரன்' ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் முழு உதவியும் ஒத்துழைப்பும் வழங்குவதாகவும் கூறுவான். எங்களின் உதவியும் ஒத்துழைப்பும் வேண்டும் என்று வற்புறுத்துவான். நண்பர் சசிபாரதியும் மற்றவர்களும் அவனைக் கிண்டல் செய்வதும் உண்டு. அவன் விடாமுயற்சியுள்ளவன். சஞ்சிகையின் ஒன்றிரண்டு இதழ்களை அவன் வெளியிட்டதாக ஞாபகம். இதன் பின் சுதந்திரனுக்கு விளம்பரம் சேகரிப்பதாக இரண்டொரு தடவை சந்தித்தபோது தெரிவித்தான். பின்னர் நீண்டகாலம் அவனைச் சந்திக்கவில்லை. 1960 ஆம் ஆண்டில் வீரகேசரியில் வேலை நிறுத்தம் - கதவடைப்பு, நான் யாழ்ப்பாணத்தில் அப்பொழுது வாரம் இரு முறையாக வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி ஆசிரியராகச் சேர்ந்து 1961 ஆம் ஆண்டிலிருந்து அதை தினசரிப் பத்திரிகையாக வெளிக் கொணர்வதில் உழைத்துக் கொண்டிருந்தேன். ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை - திடீரென்று ஒரு நாள் இரத்தினசபாபதி என்று ஒருவர் என்னைச் சந்திக்க வந்திருப்பதாகவும் தகவல் வந்தது. அவர் வந்தார். சஞ்சிகை நடத்த ஒத்துழைப்புக் கேட்ட அந்தச் சிறுவன் இப்போது வாட்ட சாட்டமான இளைஞனாக என் முன்னே அமர்ந்தான்.

சுதந்திரனை விட்டுவிட்டு லண்டனுக்குச் சென்றதாகவும் அங்கு பொருளாதாரத்தில் பட்டப்படிப்புப் படிப்பதாகவும் இரத்தினசபாபதி தெரிவித்தார். லண்டன் பினான்சியல் "ரைம்ஸ்" பத்திரிகையில் தான் ஒரு சிறப்பு மலர் இலங்கையைப் பற்றி வெளியிட்டதாகவும் அதற்கு இலங்கை அரசும் அமைச்சர்களும் பத்திரிகையாளர்களும் பாராட்டியிருப்பதா

கவும் தெரிவித்தார். பத்திரிகைத் தொடர்புகளைத் தாம் விட்டு விடவில்லையென்றும் சொன்னார். இரண்டு மூன்று நாள்கள் தொடர்ந்து வந்து வெளியில் போய்ச் சந்தித்துப் பல விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டோம். இவரைப் பற்றி நான் எனது "ஊர் சுற்றி" ப் பத்தியிலும் குறிப்பிட்டிருந்தேன். பின்னர் அவர் லண்டன் போய்விட்டார். சிறுவயதில் சஞ்சிகை நடத்தியபோது 'இணுவை மாறன்' என்று புனை பெயர் வைத்திருந்தார்.

இரண்டொரு வருடங்களின் பின் "இணுவை மாறன்" மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சந்தித்தார். வெளியே சென்று சந்தித்துப் பேசிய போதெல்லாம் அரசியலில் தான் அதிக நாட்டம் காட்டினார். சில தினங்களின் பின் மீண்டும் லண்டன் செல்வதாகக் கூறிச்சென்றார்!

சில குறுகிய வருட இடைவெளியின் பின் மீண்டும் என்முன் தோன்றிய இணுவை மாறன் என்ற இரத்தினசபாபதி இரு இளம் பையன்களை எனக்கு அறிமுகப்படுத்தி இவர்கள் புதிதாக ஒரு சஞ்சிகை தொடங்கி நடத்த விரும்புகிறார்கள் அவர்களுக்குச் சகல உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். சில தினங்கள் சந்தித்தோம். வெளியில் சந்திக்கும்போதெல்லாம் அவரைத் தேடி அந்த இளம் பையன்களும் மற்றும் சிலரும் வருவார்கள். இரத்தினசபாபதி "ஒரு நிமிடம் - வண்மினிட் " என்று என்னிடம் கூறிவிட்டு அவர்களுடன் தனியாக இரகசியமாக பல நிமிஷங்கள் சில சமயம் மணிக்கணக்கிலும் ஆலோசனை நடத்துவார். அந்த இரகசியங்களில் நான் மூக்கைத் துளைத்ததில்லை. அவர்களுடைய பத்திரிகைக்கு ஆரம்பத்தில் உதவி செய்தேன். பின்னர் அவர்களுக்கு எனது உதவி தேவைப்படவில்லை ! இரத்தினசபாபதி போய்விட்டார். மீண்டும் ஒரு தடவை வந்து சந்தித்ததார். கொழும்பிலும் அவரை ஒரு தடவை சந்தித்தேன் ! இது 1980 ஆம் ஆண்டில் !

இதே எண்பதாம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எங்கள் அயலில் இரு பையன்கள் ஜெர்மனிக்குப் போவதற்கு ஆயத்தமானார்கள். எனது மூத்த மகனுக்கும் இதில் ஒரு ஆசை. இவன் ஜெர்மனிக்கு போய் என்ன செய்யப் போகிறான். இங்கேயே ஏதாவது ஒரு வேலை பார்க்கலாமே என்பது எனது கருத்து. உங்களின்ரை 'ஈழநாட்டு' சம்பளத்தில் என்ன செய்வது; இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் ஏதாவது செய்யவேண்டாமா?" என்று மகனுக்கு சார்பாக எனக்கு எதிராக அம்மா கொடி உயர்த்தினாள். எப்படியோ கொஞ்சம் பணம் கடன்பட்டு மூத்தமகனை கட்டுநாயகா விமான நிலையத்தில் வழியனுப்பி விட்டு நான் வீடு திரும்பினேன்.

ஜெர்மன் போனமகன் அங்கிருந்து எழுதிய கடிதங்களில் தனக்கு வேலை கிடைக்கவில்லை என்று தெரிவித்துக் கொண்டிருந்தான்.

அவன் எழுதிய கடிதமொன்றில் "உங்க நண்பர் இரத்தினசபாபதி லண்டனிலிருந்து ஜெர்மனிக்கு வருகிறாராம். சில வாரங்கள் இங்கு தங்குவாராம். நீங்கள் அவருக்கு ஒரு கடிதம் எழுதினால் எனக்கு கப்பலில் அல்லது வேறு எங்காவது வேலை தேடித் தருவாரென்று நினைக்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தான். இக்கடிதம் கிடைத்ததும் நண்பர் இரத்தினசபாபதிக்கு ஒரு கடிதம் எழுதி மகனுக்கே அனுப்பி வைத்தேன்.

"இரத்தினசபாபதியைச் சந்தித்து கடிதம் கொடுத்தேன்; அவரும் அவரது நண்பரும் "எனக்காக முயற்சி செய்கிறார்கள் விரைவில் கப்பலில் வேலை கிடைக்குமென்று நினைக்கிறேன்" என்றும் மகனிடமிருந்து மீண்டும் ஒரு கடிதம் வந்தது. பின்னர் சில மாதங்களாக அவனிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. இதற்கிடையில் நான் 'ஈழநாடு' பத்திரிகையிலிருந்து "உடல்நிலை" காரணமாக ஓய்வுபெற்று எனது மூத்த மகளின் திருமணமும் முடிந்து அவளுக்கு குழந்தையும் பிறந்தது. தாய்மாமன் என்ற

முறையில் மருமகனுக்கு ஒரு கம்பளிச் சட்டை அனு பியிருந்தான். பின்னர் மௌனம்; ஜெர்மனியில் அவனுடைய முகவரிக்கு எழுதிய கடிதங்களுக்கு பதிலே இல்லை. அவன் அம்மா சோதிடர்களிட அவனைப் பற்றிக் கேட்டுக்கொண்டு ஆறுதலடை தாள்.

திடீரென்று மகனிடமிருந்து நான்கு வரிகளில் ஒரு கடிதம் வந்தது ! "நான் சுவிட்சர்லாந்தில் வந்திறங் கியிருக்கிறேன். நிரந்தர விலாசம் கிடைத்ததும் கடி தம் எழுதுவேன்"

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாந் திகதி சென்னை சைதாப்பேட்டை பஸ் தரிப்பு நிலையத் தில் எனது மகன் என்னை வந்து சந்திக்கும் வரை தான் சுவிற்சலாந்தில் நிரந்தர விலாசம் தேடிக்கொ ண்டிருப்பதாகத்தான் அப்பா நினைத்துக் கொண் டிருக்கிறாரென்று அவன் எண்ணியிருக்கவேண்டும் ! ஜெர்மனியில் அவனுக்கு ஒரு வேலை தேடிய நண் பர் இரத்தினசபாபதி சென்னையில் தங்கியிருந்த வீட்டுக்குள் மகன் இப்பொழுது என்னை அழைத்துச் சென்றான். வழமை போல் பாய்ந்து வராமல் சுகயீ னம் காரணமாக மெதுவாக நடந்து வந்து கட்டிப் பிடித்துக் கொஞ்சி நண்பர் என்னை வரவேற்றார் !

## 2

தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையில் யுனைட்டட் இந்தியா காலனி என்று ஓரிடம் இருக்கின்றது. கோடம்பாக்கம் வடபழனி செல்லும் பாதையில் மேம்பாலம் முடிவடையும் லிபர்ட்டி தியேட்டர் சந்திக்கருகே இந்தக் காலனி உள்ளது. இங்கு தி.மு. கழக வழக்கறிஞராக இருந்த வக்கீல் டி.பி.ராதா கிருஷ்ணனின் வீட்டுக் கராஜுடன் உள்ள ஒரு சிறிய இடம். வராந்தா மாதிரி ஒரு அறை அடுத்து சிறு குளியல் அறை அடுத்து சிறிய குசினி. முன்னுள்ளவராந்தா போன்ற அறையில் ஒரு மேசை அதற்கு அருகே ஒரு இரும்புக்கட்டில். இது தான் நண்பர் இரத்தினசபாபதி தங்கியிருந்த 'மாளிகை' !

எனது 'கடல்பயணம்' பற்றி நண்பர் இரத்தினா விசாரித்தார். அவருடைய சுகயீனம் பற்றி நான் விசாரித்துத் தெரிந்துகொண்டேன். மருத்துவமனையில் தாம் இருந்தபோது இயக்கத் தலைவர்கள் எல்லோரும் வந்து பார்த்துச் சென்றார்கள். 'தம்பியும் வந்து பார்த்தார் என்று பெருமையாகச் சொன்னார். குடிப்பதை விட்டு விட்டதாகச் சொன்னார். மருத்துவமனையிலிருந்து இப்பொழுதுதான் வந்திருக்கிறீர்கள் குடிப்பதை விடாமலிருக்கமுடியுமா ? என்று கேட்டேன். "இனிக்குடிக்கமாட்டேன்" என்று எல்லாக் குடிகாரரும் சொல்வதையே அவரும் சொன்னார்.

மழைத்தூறல் சிறிது ஓய்ந்திருந்தது. சாப்பிடப் போகலாம், என்று நண்பரும் மகனும் சொன்னார்கள். நான் குளித்துவிட்டு உடுப்பு மாற்றிக்கொண்டு புறப்பட்டேன். ஹோட்டலுக்குச் செல்லும் வழியில் மதுபானம் விற்கும் கடையின் வாசலில் நின்ற நண்பர் என்னை உள்ளே சென்று ஒரு குவார்ட்டர் எடுத்து விட்டு வாரும்" என்றார். வேண்டாம் என்று மறுத்தும் நண்பர் விட்டபாடாக இல்லை. அந்தக் கடை வாசலில் நின்று வாதிடுவது அசிங்கம். என்னைத் தொடர்ந்து நண்பரும் உள்ளே நுழைந்துவிடுவாரோ என்பது தான் மகனின் கவலையாக இருந்தது. இரவுச் சாப்பாட்டின்பின் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தபின் தூங்கிவிட்டோம்.

மறுநாள் காலையில் கோபால் என்ற நண்பர் ஒருவரை மகன் கூட்டி வந்து நான் சுமந்து வந்த சோப் மற்றும் பொருள்களைக் கையளித்தான். அவரைப் பொறுத்தவரையில் இந்தப் பொருள்களை ஏன் சுமந்தீர்கள் என்பது தான் கேள்வி. இன்னும் பெறுமதியான சிறிய பொருள்கள் பல இருக்கின்றன என்றார். இதெல்லாம் எனக்கென்ன தெரியும் ? அப்போதும் தெரியாது; இப்போதும் தெரியாது ! இந்த கோபால் பின்னர் எனக்கு உறவினராகிவிட்டார். ஆமாம் அவரது தங்கையை எனது கடைக்குட்டி மணம் செய்து கொண்டான். அதுவேறு கதை ! கோபால் வீட்டிலிருந்துதான் நண்பர் இரத்தினாவுக்குச் சாப்பாடு வந்து கொண்டிருந்தது. என்னையும் தமது வீட்டிலேயே சாப்பிடும்படி அவர் கேட்டுக் கொண்டார். தீபாவளியும் நெருங்கிவிட்டது. எனக்கும் இரத்தினாவுக்கும் அவர் இரண்டு நான்கு முழ வேட்டிகளும் அன்பளிப்புச் செய்திருந்தார் !

திம்பு மாநாட்டுக்குச் சென்றிருந்தவர்கள் முதல் கூட்டம் முடிந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். திம்பு மாநாட்டுக்காக போராளிக்குழுக்கிடையிலும் கூட்டணிக்கிடையிலும் "ஒற்றுமை" ஏற்பட்டிருந்தது. இந்த ஒற்றுமை நிரந்தரமாக நீடிக்குமா ; இதை

நிரந்தரமாக்க முடியுமா ? என்ற கேள்வி என்னுள்ளே எழுந்திருந்தது. இந்த நிரந்தர ஒற்றுமை முயற்சியில் நாமும் ஏதாவது செய்யமுடியுமா ?

"இது பற்றி நண்பர் இரத்னாவுடன் பேசினேன். நல்ல யோசனை தான். ஆனால் இது சரிவருமா என்பது பற்றி யோசித்து உம்மை நம்பிக்கையிழக்கச் செய்ய விரும்பவில்லை. முயற்சி செய்து பாரும்" என்றார் நண்பர் இரத்னா. மகனுக்கு விருப்பமில்லை. இது வீண்வேலை என்று சொன்னான். இயக்கத் தலைவர்களைச் சந்திப்பது எப்படி ? தாம் சுகயீனமாக மருத்துவமனையில் இருந்தபோது எல்லோரும் தம்மை வந்து பார்த்ததாகச் சொல்லியிருந்தாரல்லவா ?

"இன்னும் இரண்டு தினங்களில் "யூனிற்றி ஆபிசில்" (நான்கு இயக்கங்கள் திம்பு மடாநாட்டையொட்டி ஐக்கியப்பட்டிருந்ததால் இவைகள் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஓர் அலுவலகம்) எல்லோரையும் நீங்கள் ஒரே சமயத்தில் சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கலாம்" என்று நண்பர் இரத்தினா சொன்னார். என்னை அந்த இடத்துக்குக் கூட்டிக் கொண்டு போய் விடும்படி மகனிடம் சொல்லி வைத்தார்.

மழைவிட்டு விட்டு பெய்து கொண்டிருந்தது. சென்னை நகரிலும் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. வெளியே எங்கும் போய்த்திரிய முடியவில்லை.

தீபாவளித்தினத்தன்று கோடம்பாக்கத்தில் லிபர்ட்டிச் சந்திக்கருகில் புதிதாக வெங்கடேசப் பெருமாள் கோயில் ஒன்று கும்பாபிஷேகம் செய்து பக்தர்கள் தரிசனத்துக்கு திறந்துவிடப்பட்டிருந்தது. அங்கு சென்று வந்தேன். மழை காரணமாக இம்முறை பட்டாசுச்சத்தம் குறைந்திருப்பதாக மகன் சொன்னான். என்றாலும் இடையிடையே மழை விட்ட போதெல்லாம் கேட்ட வெடிச்சத்தம் எனக்கு யாழ்ப்பாணத்தில் கேட்கும் குண்டு சத்தங்களையும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையுமே நினைவு படுத்திக்

கொண்டிருந்தது.

"யூனிற்றி ஆபீசுக்கு" மகன் என்னை சைக்கிளில் கூட்டிச் சென்றான். இரத்தினா தங்கியிருந்த யுனைட்டட் இந்தியா காலனியிலிருந்து சிறிது தூரத் திலுள்ள "பவர் ஹவுஸ்" நிலையத்துக்கு எதிரே வேளாளர் தெருவில் அந்த ஆபீஸ் இருந்தது. நான் அங்கு போன சமயம் பூட்டிய அறைக்குள் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. வெளியே சிலர் இருந்தனர் .இயக்கத் தலைவர்கள் பலரும் வரவில்லை. "கூட்டம் முடிந்தபின் நீங்கள் சந்திக்கவேண்டியவர்களைச் சந்தித்துவிட்டு அங்கேயே நில்லுங்கள் நான் பின்னர் வந்து கூட்டிக்கொண்டு போகிறேன்" என்று சொல்லி விட்டு மகன் புறப்பட்டான். போவதற்கு முன் "அப்பா வெளியே யாரிடமும் கண்டபடி எது வும் பேசாதிங்க; உளவுப் பொலிஸ்காரங்களும் வந்து ஏதாவது கேட்பார்கள்" என்றான். சுமார் அரைம ணிநேரம் காத்திருப்பேன். அறைக்கதவு திறப்பட்டது. முதலில் ஈரோஸ் தலைவர் பாலகுமாரன் வெளியே வந்தார். நான் விஷயத்தைச் சொன்னேன்" என்னை நீங்கள் எப்போதும் சந்திக்கலாம். மகனிடம் சொன் னால் அவர் கூட்டிக்கொண்டு வருவார். இப்ப நீங்கள் மற்றவர்களிடம் பேசுங்கள்" என்று சொல்லி விட்டு படியிறங்கிச் சென்றார்.

(கூட்டம் நடந்த)அறைக்குள் நுழைந்தேன். கூட்டத் தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் வெளியேறுவதற் குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். என்னை நான் அறிமுகப்படுத்திக்கொண்டு அவர்களையும் அவர்க ளின் தலைவர்களையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச விரும்புகிறேன் என்று தெரிவித்தேன்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் சார்பில் கூட்டத் தில் கலந்துகொண்ட வரதராஜப்பெருமாள், கோடம் பாக்கத்திலுள்ள தங்கள் அலுவலகத்துக்கு மாலை யில் அல்லது மறுநாள் மாலையில் வந்து சந்திக்க லாம் " என்று கூறிவிட்டு தம்முடன் வந்தவர்களுடன் புறப்பட்டுச் சென்றார்." இந்திரா நகருக்கு வந்தால் எங்களைச் சந்திக்கலாம். மாலை நேரத்தில் வந்தால்

நல்லது" என்று விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திலகர் சொல்லிவிட்டு தம்முடன் வந்தவர் களுடன் சென்றார். கூட்டத்தில் கலந்துகொண்ட ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த 'மதி' என்ற இளை ஞன் இப்பொழுதே பேசலாம் என்றும் எனது வச தியைப் பொறுத்துப் பின்னரும் சந்திக்கலாம் என்றும் சொன்னார். உடனேயே பேச்சை ஆரம்பித்தோம். அறைக்கதவு மூடப்பட்டது.

இப்பொழுது இயக்கங்களுக்கிடையில் திம்பு மாநாட் டுக்காக ஏற்பட்டுள்ள ஐக்கியம் நிரந்தரமாக நீடிக் குமா, இதில் சேராமலிருக்கும் இயக்கத்தையும் மற் றும் அரசியல் கட்சிகளையும் சேர்த்து ஒரே தலை மையின் கீழ் விடுதலைக்கான ஒரே அமைப்பை உருவாக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா; இப்படி ஒரே அமைப்பு உருவாகமுடியுமா? என்று கேட் டேன்.

மதி சற்று நேரம் யோசித்தார். அவருடைய உதவி யாளர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டனர். யாரும் பதில் சொல்லத் தயங்கினர்.

"இது நல்ல யோசனை தான். இப்படி ஒரே அமைப்பு உருவாக்கப்பட்டால் பிரச்னைக்கும் நல்ல முடிவு விரைவில் கிடைக்கும் என்றும் நம்பலாம்...ஆனால்" என்று இழுத்தார் மதி. திடீரென்று "உங்களை முன் பும் பார்த்தாக ஞாபகம்; உங்களைப்பற்றிக் கேள்விப் பட்டுமிருக்கிறேன்" என்று தொடர்ந்தார்.

இருக்கலாம், பல வருடங்களாகப் பத்திரிகைத் தொழிலில் இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நிரந்தரமாக ஐக்கியம் கஷ்டமானது என்று கருதுகிறீர் களா? " என்று கேட்டேன்.

"கஷ்டமானது தான். மிகக் கஷ்டம்" என்று சொன்ன மதி ஒரு புன்சிரிப்புடன் "இப்பொழுது ஏற்பட்டிருக் கிற ஐக்கியமும் உண்மையானதல்ல" என்றார். இது ஒரு தற்காலிக ஐக்கியம் தான். எவ்வளவு காலத் துக்கு எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என்று கூடச் சொல்லமுடியாது" என்று சற்றுக் கவலையுடன் சொன்னார்.

நிரந்தர ஐக்கியத்துக்கு யார் இடையூறாக இருக்கிறார்கள் "என்றேன்.
"யார் என்று எப்படிச் சொல்வது; எல்லோரும் என்றும் சொல்லலாம்; எல்லோரும் இல்லை என்றும் சொல்லலாம்; நீங்கள் மற்றவர்களையும் சந்தித்துப் பேச விருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் முயற்சியில் வெற்றி பெற்றால் எனக்கும் சந்தோஷம் தான். யாரைச் சந்தித்தாலும் மிகக் கவனமாக நடந்து கொள்ளுங்கள்" என்று யோசனையும் தெரிவித்தார் மதி. யோசனையா எச்சரிக்கையா?
இதன்பின் இந்த ஐக்கியம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. வீட்டிலிருந்து புறப்படும்பொழுதே மனதில் ஒரு ஆசை. வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் சில வாரங்களுக்கு முன்பு ஆயுதந் தாங்கியவர்கள் வந்து கொள்ளையடித்தனர். திருவாபரணங்கள் மற்றும் பல பொருள்கள் கொள்ளை போயின. இவற்றுள் கோயிலின் வலம்புரிச்சங்கும் அடங்கும். முடிந்தால் இந்த வலம்புரிச் சங்கையாவது மீட்க வழிபார்க்கவேண்டும் என்பது தான் அந்த ஆசை !
பெருமாள் கோயில் கொள்ளை பற்றி மதியிடம் கேட்டேன். உங்களுக்கே கொள்ளையடித்தவர்கள் யார் என்று தெரிந்திருக்கவேண்டும்;அவர்களை நீங்கள் சந்திக்கும்போது கேட்டுப் பார்க்கலாம். ஆனாலும் இதில் எதுவித பயனும் கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை. இந்த விஷயத்தையே நீங்கள் யாருடனும் பேசாமல் விடுவது நல்லது" என்றும் மதி யோசனை சொன்னார்.
"மீண்டும் சந்திப்போம்" என்று கூறிக் கொண்டு மதியும் அவரது உதவியாளர்களும் புறப்பட்டுச் சென்றனர். மகன் வந்ததும் நானும் புறப்பட்டேன்.
மற்ற இயக்கத்தினரை சந்திக்கும் எண்ணத்தை ஒத்திவைத்தேன். யாழ்.எம்.பி.யாக இருந்த நண்பர் யோகேஸ்வரனை முதலில் சந்திக்கலாம் என்று தீர்மானித்தேன்.
ஆழ்வார்பேட்டையிலுள்ள வீனஸ் காலனியில்

அவரது வீடு இருப்பதாக அறிந்து அங்கு சென்றேன். கதவைத் திறந்த திருமதி யோகேஸ்வரன் கதவைத் திறந்து என்னைக் கண்டதும் "உங்களைப் பார்த்ததும் ஆலாலசுந்தரத்தைப் பார்ப்பது போலிருக்கிறது" என்றார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் நண்பர் ஆலால் யாழ்.நகரில் கொலை செய்யப்பட் டார். நான் வீட்டுக்குள் கால் வைப்பதற்குள் வெளியே போயிருந்த நண்பர் யோகேசும் வந்து சேர்ந்தார். 'ஆலால்';'தர்மர்' கொலை பற்றியே அவர்கள் முதலில் பேசினார்கள்.

இதன்பின் எனது பயணம் பற்றிப் பேசினோம். இயக் கங்கள் கூட்டணி ஒற்றுமை பற்றியும் திம்பு மாநாடு பற்றியும் நான் விசாரித்தேன். திம்பு மாநாட்டு ஒற் றுமை நிரந்தரமாக நீடிக்குமா என்றும் "இந்த ஒற்று மையை நிரந்தரமாக்கமுடியாதா என்றும் கேட்டேன். இந்த முயற்சியில் தாமும் சிறிது முனைந்ததாகவும். இது ஒப்பேறக்கூடிய விஷயமல்லவென்றும் யோகேஸ் சொன்னார். "கோபு இது பற்றி நீங்கள் யாருடனும் பேசாமல் விடுவதே நல்லது" என்று கூறிய யோகேஸ் இரண்டு தினங்களுக்கு முன் இணுவில் தவில் வித்துவான் என்.அர். சின்னராசா வந்திருந்ததாகவும் அவரது மகனும் இங்கு ஒரு இயக் கத்திலிருந்ததாகவும் அதுக்குக்குள்ளேயே மகன் உயிர் போய்விட்டதாகவும் அழுதுவிட்டுப் போனார் என்று கவலையுடன் சொன்னார்.

இரண்டு தினங்களுக்குப் பின் விடுதலைக் கூட்ட ணிச் செயலாளர் நாயகமும் இலங்கையின் பாரா ளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந்த திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தைச் சந்திக்கச் சென்றேன்.

சேப்பாக்கம் அரசு விருந்தினர் விடுதியில் தங்கியி ருந்த திரு. அமிர்தலிங்கத்தை நான் சந்திக்கச் சென் றிருந்த சமயம் திம்பு மாநாட்டுக்கு புதுயோசனை கள் சமர்ப்பிக்கும் படி கேட்கப்பட்டிருந்ததால் அவர் அதைத் தயாரித்துக் கொண்டிருந்தார்.

என்னுடன் கொண்டு சென்றிருந்த "செய்திக்கதிர்" சஞ்சிகை இதழ்கள் சிலவற்றை அவரிடம் கொடுத்தேன். அவற்றைப் புரட்டிப் பார்த்த அமிர்தலிங்கம் "இது யாழ்ப்பாணத்திலிருந்தா வெளிவருகிறது ? நீங்கள் தானா ஆசிரியர், ஆச்சரியமாயிருக்கு ! இராணுவத்திடம் சிக்குப்பட்டால் அவ்வளவு தான். கவனமாக இருக்கவேண்டும்" என்று கூறினார்.

தர்மலிங்கம் ஆலாலசுந்தரம் கொலை பற்றி அமிர்தலிங்கமும் விசாரித்தார். இக் கொலைகள் பற்றி ஒரே இயக்கத்தைச் சேர்ந்த இரு பிரிவுகள் ஒருவர் மீது ஒருவர் குற்றச் சாட்டுக்களை சுமத்திவெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள் பற்றியும் கேட்டார். "நான் அங்கேயிருந்திருந்தால் அவர்களை விட்டுவிட்டு என்னை முடித்திருப்பார்களோ?" என்றும் சொன்னார்.

திம்பு மாநாட்டில் தமிழ்க்குழுக்களுக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமை பற்றியும் இந்த ஒற்றுமை ஒரே அமைப்பை உருவாக்கி நமது விடுதலையைத் துரிதப்படுத்த முடியாதா ? என்று கேட்டேன்.

திம்பு மாநாட்டு ஒற்றுமையை உண்மையான ஒற்றுமையென்று சொல்லக்கூடியதாக இல்லை. நான் எடுத்த ஒற்றுமை முயற்சிக்கும் ஆதரவு இல்லை. ஒரு கொள்கைத்திட்டத்தின் கீழ் எல்லோரும் ஒன்றுபடும் வாய்ப்பே இல்லை" என்று அவர் சொன்னார்.

இயக்கங்களைச் சந்தித்து இதுபற்றிப் பேசலாம் என்று நான் யோசித்து வந்தேன் என்று நான் சொன்னபொழுது "அது பயன் தருமா என்பது மட்டுமல்ல நீங்கள் இதில் ஈடுபடுவது கூட ஆபத்தானதென்றே நினைக்கிறேன்" என்றார்.

திம்பு பேச்சுவார்த்தையும் பிரயோசனப்படுமா என்றே சந்தேகப்படுவதாகவும் அமிர்தலிங்கம் சொன்னார்.

ஜே.ஆரின் சொல்படி வெளிவிவகார அமைச்சில் நமக்கு அனுதாபமுள்ளவர்கள் எல்லோரையும் ராஜீவ் அரசு மாற்றிக் கொண்டிருக்கிறது என்றும் அமிர்தலிங்கம் கூறினார்.

பின்னர் வேறு பல விஷயங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கையில் நெடுமாறன் யாழ்ப்பாணத்தில் நின்றபோதே "சற்றடே றிவியூ"வில் காமினி செய்தி வெளியிட்டிருக்கக்கூடாது என்று அவர் சொன்ன தும், "அதை யார் போட்டதென்று தெரியவில்லை

ஒரு வேளை சேரன் போட்டிருப்பாரோ" என்று நான் சொல்லி முடிக்குமுன்னரே "யார் எங்கடை மகாகவியின்ர மகன் சேரனோ? என்று கேட்கவும் 'ஆம்' என்று நான் தலையை அசைக்கவும் " அவன் தானே யாழ்ப்பாணம் யுனிவர்சிட்டிக்கு முன்னுக்கு என்ரை கொடும்பாவிக்கு கொள்ளி வைச்சவன்" என்றாரே பார்க்கலாம். என் மூஞ்சியில் அசடு வழிந் தது!

எனது ஒற்றுமை முயற்சிக்கு யாரும் ஆதரவு கொடுப் பதாக இல்லை. அதுமட்டுமல்லாமல் என்னைப் பயமுறுத்துவதாகவும் இருந்தது ! இன்னும் ஒருவர் இருக்கிறார் அவரையும் சந்தித்துப் பேசிப் பார்ப் போம் என்று முடிவு செய்து கொண்டேன். மழையோ தொடர்ந்துவிடாமல் பெய்யத் தொடங் கியது. சென்னை நகரில் பெருவெள்ளம். விழுப்புரத் துக்கு சமீபத்தில் ஒரு பாலத்தில் பிரயாணிகள் பல ருடன் பஸ் ஒன்று ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு விட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. வெள்ளத்தில் வீட்டுச்சுவர்கள் விழுந்து உயிர்ப்பலி எடுத்த செய்திகளும் வெளிவந்து கொண்டிருந்தன.

நண்பர் இரத்தினாவின் "மாளிகை"யில் அவரது கட்டிலுக்கும் மேசைக்கும் அருகில் சுவருக்கு இடை யில் தான் நானும் மகனும் இரவில் படுத்துக் கொள் வோம். நல்லதொரு கம்பளியும் மழைக்குளிரைத் தாங்கக்கூடியதாக இருந்தது. இந்த "மாளிகையை"ச் சுற்றிலும் கூட வெள்ளம் சூழ்ந்து நின்றது. "மாளி கை"யின் சுவரும் நீர் ஊறி அதன் வர்ணமே மாறிப் போயிருந்தது. அறைக்குள் இருந்தாலே 'எயர்' கண் டிஷன் செய்யப்பட்டது போலிருந்தது. வெள்ளத்தில் சுவர்கள் இடிந்து விழுந்து உயிர்ப்பலியான செய்தி

கள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்த தைப் பார்த்ததும் இந்தச் சுவரும் வெள்ளத்தில் இடிந்து விழுந்து... பத்திரிகைகளில் செய்தி வரக் கூடுமென்ற அச்சம் ஏற்பட்து. மறுநாள் நான் சந்திக்க நினைத்த அவரிடம் மகன் என்னைக் கூட்டிச் சென்றார். நல்ல மழை ஒரு குடையின் துணையுடன் பஸ்ஸில் ஏறி இறங்கி அவர் இருந்த இடத்துக்குச் சென்றோம்.

# 3

பஸ்ஸிலிருந்து இறங்கும்போதே மழை 'சோ'வென்று கொட்டிக் கொண்டிருந்தது.ஒரு சின்னக்குடையில் மகன் என்னைக் கூட்டிச் சென்றான். சில வளைவுகள் திரும்பி ஒரு வீட்டுக்குள் நுழைந்தோம். அங்குதான் 'ஈரோஸ்' பாலகுமாரன் தங்கியிருந்தார்.. மிகச் சிறிய இடம்; சிறிய இரண்டு அறைகள், பாலகுமாரனுடன் சுந்தரும் மற்றும் மூன்று நான்கு பையன்களும் இங்கு தங்கியிருந்தனர். முன் அறையில் விரித்திருந்த பாயில் அமர்ந்தேன். சில நிமிஷங்களில் பாலகுமாரன் 'வணக்கம்' சொல்லிக்கொண்டு அருகே வந்தமர்ந்தார். நாட்டுப் புதினங்களைக் கேட்டார். இச்சமயத்தில் சுந்தரும் வந்து பாயின் ஒரு மூலையில் அமர்ந்து சுவருடன் சாய்ந்து கொண்டார். 'ஈழப்போராட்டம்' பற்றிப் பேச்சைத் தொடங்கினேன். இப்போராட்டத்தில் ஈரோஸ் தெளிவான சிந்தனையுடன் இருக்கிறது என்று கூறிய பாலகுமாரன் சிறிது விளக்கமாகச் சொல்லத் தொடங்கினார். இயக்கங்கள் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக இப்போராட்டத்தை நடத்தமுடியாதா ? என்று கேட்டேன். ஈரோஸ் அமைப்பைப் பொறுத்தவரையில் எல்லா இயக்கங்களுடனும் நட்புடனும் ஒற்றுமையுடனும் பழகிவருகிறதென்றார். திம்பு மாநாட்டில் இயக்கங்களுக்கும் கூட்டணியுடனும் ஏற்பட்டுள்ள ஐக்கியம்

தொடர்ந்து நீடிக்குமா, நிரந்தரமான ஐக்கியமாக இது நிலைபெறமுடியுமா ? என்று கேட்டேன். இது நிரந்தரமான ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பது தான் எங்கள் விருப்பமும் என்று பாலகுமாரன் கூறியபோது சுந்தரிடமிருந்து ஒரு புன்சிரிப்பு வெளி வந்தது !

எல்லா இயக்கத் தலைவர்களையும் சந்தித்துப் பேச வேண்டுமென்பதும் ஒரு பொதுக் கொள்கைத் திட்டத்தின்கீழ் சகல இயக்கங்களையும் கட்சிகளையும் ஒன்றுபடுத்த முடியுமா என்று முயற்சி செய்து பார்க்கலாமென்ற யோசனையுடன் தான் இங்கு வந்தேன் என்று கூறினேன். பாலாவும் சுந்தரும் முறுவல் செய்தனர். இதுவரை நீங்கள் சந்தித்தவர்கள் நிலை எப்படி? என்று பாலா கேட்டார். "எல்லோரும் எனது யோசனையை நல்லதென்று சொல்கிறார்கள். இந்த முயற்சியில் இறங்க வேண்டாமென்றும் இறங்குவதால் நான் சுகமாக திரும்பிச் செல்ல முடியாமல் போகலாம் என்றும் மிரட்டுகிறார்கள்" என்றேன். மீண்டும் பாலாவிடம் ஒரு புன்சிரிப்பு !

எப்பொழுது நாடு திரும்பும் உத்தேசம் என்று பாலா கேட்டார். மழைவெள்ளமாக இருக்கிறது. போக்குவரத்து சீர்குலைந்திருக்கிறது. திருச்சிக்கும் மதுரைக்கும் திருவனந்தபுரத்துக்கும் ஒரு தடவை போய் வரவேண்டும் என்றேன். நான் வந்து சேர்ந்த விபரத்தையும் சொல்லி போகும்போது நான் வந்து இறங்கிய இடத்துக்குப் போய் நான் வந்த படகுக்காரர் இருந்தால் தான் போகமுடியும் என்றேன்.

நீங்கள் புறப்படத் தயாரானதும் சொல்லுங்கள் உங்களை உங்கள் வீட்டில் பவித்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்போம் " என்று பாலா உறுதியாகச் சொன்னதும் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டேன். பின்னர் நண்பர் இரத்தினாவைப்பற்றியும் அவர் தங்கியிருக்கும் "மாளிகை" பற்றியும் பேச்சு வந்தது. மழைவெள்ளம் காரணமாக இரத்தினாவின் "மாளிகை"ச் சுவர் ஒன்று நன்றாக நீரில் ஊறி நிறம் மாறி நிற்கிறது. அதன் ஓரமாகத்தான் நான் இரவில்

படுத்து காலம் கழிக்கிறேன் என்று சொன்னேன். மழை ஓய்ந்தபாடாக இல்லை. நான் புறப்பட ஆயத்தமானேன். ஒரு நிமிஷம் என்று கூறிவிட்டு மகனைத் தனியாக அழைத்துச் சென்று தனியாகப் பேசினார். இருவரும் புறப்பட்டோம். நல்ல மழையில் எங்கோ என்னைக் கூட்டிக் கொண்டு போனான். மழை மிகவும் பலமாக இருப்பதால் இரண்டு மூன்று தினங்களாவது ஒரு ஹோட்டலில், லாட்ஜ் இல் என்னைத் தங்கவைக்குமாறு பாலா சொன்னாராம். இரண்டு மூன்று லாட்ஜ்களில் இடமில்லையாதலால் பாண்டி பஜாரில் புதிதாகத் திறக்கப்பட்டிருந்த ஆந்திரக்காரர் ஒருவரின் லாட்ஜில் இடம்கிடைத்தது. இது தேவையில்லாத வேலை என்று நான் முணுமுணுத்தும் "உமது தகப்பனார் என்பதற்காக அல்ல ஒரு பத்திரிகையாளனை இப்படியாவது பாதுகாக்கவேண்டாமா "? என்று பாலா சொல்லியனுப்பியதால் தான் லாட்ஜில் றூம் எடுத்தேன் என்றான் மகன். இரண்டு நாள் தங்கியபின் வேண்டாம் போவோம் என்று சொல்லி ~~பொழுதைக் கழித்தேன்.~~
வெளியேறினோம்.

எனது சமாதான முயற்சியை என்னுள்ளேயே அடக்கிக் கொண்டேன் ! மழை கொஞ்சம் குறையத் தொடங்கியது. திருவனந்தபுரத்தில் எனது மச்சாள் இருக்கிறாள். முகவரி சரியாக நினைவில்லை என்றாலும் போய்ப் பார்த்து விடுவது என்று தீர்மானித்தேன். விழுப்புரம் பாதை இன்னும் சரியாகவில்லை என்றாலும் வேறு பாதைகளால் பஸ் போக்குவரத்து நடைபெறுவதாக அறிந்து திருவனந்தபுரம் புறப்பட்டேன். மகன் பஸ் ஏற்றிவிட்டான்.

மறுநாள் காலையில் பஸ் திருச்சியில் நின்றதும் ஸ்ரீரங்கம் போனால் என்ன என்ற யோசனை வந்தது. இறங்கிவிட்டேன்.ஒரு லொட்ஜில் அறை எடுத்து குளித்து உடைமாற்றிக் கொண்டு ஸ்ரீரங்கம் சென்று சுவாமி தரிசனம் செய்து கொண்டு புதிதாக கட்டப்படுக் கொண்டிருந்த ராஜகோபுரத்தையும் பார்த்துக்கொண்டு அறைக்குத் திரும்பினேன்.நாகர்

கோயிலில் ஆசிரியையாகப் பணியாற்றும் மச்சா ளுக்கு திருச்சியிலிருந்து தந்தி கொடுத்துவிட்டு புறப் பட்டேன்.நள்ளிரவில் நாகர் கோயிலில் இறங்கி அவளை எங்கே தேடுவது ? பள்ளிக்கூடத்தில் இருந்த வாச்சருக்கு டீச்சரைப் பற்றித் தெரிய நியாய மில்லை. அச்சமயத்தில் நாடு முழுவதும் ஆசிரியர் கள் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந் தது ! விடியும் வரை வாச்சரின் தயவினால் பள்ளிக் கூடத்தில் தங்கிவிட்டு திருவனந்தபுரத்துக்கு பஸ் எடுத்தேன். காலை பத்து மணியளவில் திருவனந்த புரத்தில் இறங்கி ஒரு ஆட்டோவில் ஏறி நான் சொன்ன முகவரி அவனுக்கே புரியவில்லை. ஒன் றரை மணி நேரம் பல இடங்களிலும் சுற்றித் திரிந்து ஒரு படியாக இடத்தையும் கண்டு பிடித்தேன். இத் தனைக்கும் ஆட்டோக்காரன் என்னிடம் பத்து ரூபாய் தான் வாங்கினான்!

நாலைந்து தினங்களின் பின் சென்னை திரும்பி னேன். மழை ஓய்ந்திருந்தது. இனி நாடு திரும்பலாம் என்று தீர்மானித்தேன்.

நான் எனது பெருமாள் சுவாமிக்கு ஒரு பட்டு வாங் கிக்கொண்டேன். எனக்கும் இரண்டு மூன்று 4 முழவேட்டிகள், மவ்ளர், சால்வை என வாங்கிக் கொண்டேன். சில பத்திரிகைகள், திம்பு மாநாடு சம்பந்தமான செய்திகள் அறிக்கைகள் கொண்ட ஒரு கோர்வை, சில புகைப்படங்கள் தனியாக ஒரு சிறு பையில் சேர்த்துக் கொண்டேன். இரத்தினாவும் மதுரைக்கு வருவதாகவும் அங்கிருந்து நான் இரா மேஸ்வரம் செல்வதாகவும் ஏற்பாடு. இரத்னா, நான், மகன் மூவரும் மதுரைக்குப் புறப்பட்டோம்.

கொழும்பு டெய்லி மிரர் பத்திரிகையிலும், அதற்கு முன் 'வீரகேசரி'யிலும், ஆரம்பத்தில் 'ஈழநாடு' பத்தி ரிகையின் கொழும்பு நிருபராகவும் பணியாற்றிய நண்பர். பி.கிருஷ்ணசாமியின் வீட்டில் போய் இறங் கினோம். நாட்டுக்குப் புறப்படுவதற்கு முன் மதுரை மீனாட்சி அம்மனைத் தரிசிக்கவேண்டும் என்று மகனையும் கூட்டிச் சென்றேன். கோயிலிலிருந்து

திரும்புகையில் துவரம் பருப்பு, கடலைப்பருப்பு, பெருங்காயம் என்று சில சில்லறை சாமான்கள் சிலவற்றை வாங்கிக் கொண்டேன். அன்றிரவு மது ரையில் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் பணியாற்றும் நண்பர் கிருஷ்ணசாமி வீட்டில் தங்கிய பின் மறுநாள் காலை நான் புறப்பட்டேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கடமையாற்றும் நண்பன் கிருஷ்ணசாமி இரவு வேலை முடிந்து வீடு திரும்பி யதும் விடைபெற்றுக் கொண்டேன். என்னை வழி யனுப்பவுதற்கு மகன் வரவில்லை. என்னை கூட்டிக் கொண்டு போய் இராமேஸ்வரத்தில் படகேற்றி அனுப்பும் பொறுப்பு சபா என்பவரிடம் ஒப்புவிக்கப் பட்டிருந்தது. தங்கச்சிமடத்துக்கு சபாவும் தாஸ் என்ற மற்றொரு பையனும் என்னுடன் வந்தார்கள். ஒரு டசின் அப்பிளும் வாங்கிக் கொண்டேன். தங் கச்சி மடத்தில் அவர்களுக்கு உதவியான வீடு. "அக்கா அக்கா" என்று இவர்கள் அன்புடன் அழைக் கும் ஒரு பெண் என்னையும் அன்பாக உபசரித்தார். நேசனும் வருகிறார் "என்று சொன்னார்கள். மைக் கேல் என்ற இளைஞரும் பயண ஏற்பாடுகளைக் கவனிக்க வந்துவிட்டார். வீரா, மோகன் என்ற ஓட்டிகளும் தயாராக இருந்தார்கள். நேசன் வராத தால் இரண்டு நாட்கள் தங்கச்சி மடத்திலேயே தங்க நேர்ந்தது. நான் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவிலுக்குச் சென்று தரிசித்து வந்தேன். வீணாகப் பொழுது போவது பெரும் கஷ்டம். காளையார் கோயிலில் நண்பர் அழகர் சாமி வீடு இருந்தது. அவரும் வீட்டுக்கு வருவதாக நான் யாழ்ப்பாணத் தில் புறப்பட்டபோது சொல்லியிருந்தார். காளையார் கோயிலுக்குப் போனேன். அழகர் சாமி வரவில்லை. காளையார் கோயிலுக்குப் போகும்போது இராம நாத புரத்தில் ஒரு ஹோட்டலில் நண்பகல் சாப்பி டச் சென்றிருந்தேன். நாலு முழ வேட்டி, சட்டையு டன் கழுத்தில் கறுப்பு நிற 'மவ்ளர்' அணிந்திருந் தேன். ஹோட்டல் சப்ளையர் "சாமி வாங்க, உட் காருங்க" என்று மரியாதையாக நடத்தி உணவு

பரிமாறினார். மற்றும் பலர் கறுப்பு வேட்டி, கறுப்புச் சால்வை ,கறுப்புச்சட்டை அணிந்திருந்தனர். அது ஐயப்பன் திருவிழாக் காலம். எனது கறுப்பு மவ்ளர் எனக்கும் மரியாதையைத் தேடிக் கொடுத்தது. காளையார் கோயிலில் மாலை மம்மல் பொழுதில் போய் இறங்கியதும் எதிரே வேலை நிறுத்தம் செய் யும் ஆசிரியர்களின் கூட்டம் நடைபெற்றுக் கொண் டிருந்தது. நான் இறங்கியதும் இருவர் கரங் கூப்பி என்னை எதிர் கொண்டு அழைத்தனர். நானும் பதிலுக்கு கரங்கூப்பிவிட்டு "முன்னே போயிற்று வருகிறேன்" என்று சைகை செய்தபடியே சென்று விட்டேன். ! ஆழகர் சாமி வந்திருக்கவில்லை. வீட் டுக்காரர் உணவு தந்து இரவில் தங்க வைத்தனர். காலையில் வரலாற்றுப் புகழ்மிக்க காளையார் கோயிலுக்கும் சென்று தரிசித்தேன். மிகப் பெரிய கோயில், அன்று காலை சுவாமி தரிசனத்துக்கு நான் மட்டும் தான் !

காளையார் கோயிலிலிருந்து தங்கச்சி மடத்துக்கு திரும்பியதும் பயணத்துக்கு ஆயத்தமாகி இருந்தது. கடற்கரைக்குக் கூட்டிச் சென்றார்கள். புத்தகங்கள், சஞ்சிகைகள் , பருப்பு மற்றும் சிறு பொருள்கள் வைத்திருந்த எனது சிறு பை மற்றும் பொருள்களு டன் பெரிய பொலித்தீன் உறையில் போட்டுக் கட் டப்பட்டிருந்தது. படகில் பொருள்கள் ஏற்றப்பட்டன. மைக்கல் என்ற இளைஞன் அரைப் போத்தலில் எனக்குக் குளிர் தாங்கும் மருந்து கொண்டு வந்து தந்து படகின் ஓரத்தில் செருகி வைத்தான். மாலை ஆறுமணிக்குப் படகு புறப்பட்டது. துப்பாக்கி வேட்டு முழங்கி படகு புறப்பட்டதும் அந்த ஊர் மக்கள் பலரும் அன்புடன் கைகளை அசைத்து விடை கொடுத்தனர். நான் வாங்கிவைத்திருந்த அப்பிள் காளையார் கோயிலிலிருந்து திரும்புவதற்குள் அழு கிவிடும் என்பதால் சுத்தமாக்கிவிட்டார்கள் !

படகு இருளில் போய்க் கொண்டிருந்தது. வேகத் தைச் சற்றுக் குறைத்துவிட்டு ஓட்டிகள் பல விஷ யங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தார்கள்

திடீரென்று எங்கள் படகின் மீது வெளிச்சம் பாய்ந்தது. அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலும் நீலக்கடலில் வெள்ளை நுரைதள்ளும் அலைகளும் எமது படகும் அந்த நிலாப் போன்ற வெளிச்சம் சினிமா படத்தில் வரும் காட்சி போல் மிக அழகாகவே இருந்தது. டேய் வந்திட்டான்டா, எடடா ஏகேயை" என்ற குரல்களுக்கிடையே 'படபடவென்று துப்பாக்கி வேட்டுக்'கள் எமது படகிலிருந்து புறப்பட்டன. எங்கள் மீது பாய்ச்சப்பட்ட வெளிச்சம் மறைந்தது. எனது கண்பார்வைக்கு கடலில் எதுவுமே தெரியவில்லை ! மீண்டும் சிறிது நேரத்தில் கடலிலிருந்து எமது படகு மீது வெளிச்சம் பாய்ச்சப்பட்ட அதே சமயம் அந்த வெளிச்சத்துடன் சிவப்புத் தீப்பிழம்பு போல சிவப்பும் நீலமும் கலந்த வஸ்துக்கள் (குண்டுகள்) எங்கள் படகை நோக்கி வந்து படகைத் தாண்டிக் கடலுக்குள் வந்து விழுந்தன. இவற்றுள் ஒன்று என் தலைக்கு நேராக வந்து என்னைத் தாண்டிக் கடலுக்குள் விழந்தது ! இதே சமயம் எமது படகிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாக அந்த வெளிச்சம் வந்த இடத்தை நோக்கித் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. வெளிச்சம் மீண்டும் மறைந்தது !

எங்கள் படகை நோக்கி இலங்கைக் கடற்படையின் பீரங்கிப் படகு வெளிச்சம் பாய்ச்சி குண்டுகளைத் தீர்த்தபோது "எங்கள் கதை முடிந்தது" என்றே தீர்மானித்துவிட்டேன். அந்த சில நொடிகளில் எத்தனையோ கற்பனைகள். இதே சமயம் எனது வாய் 'ராம், ராம்' என்று முணுமுணுத்துக் கொண்டாலும் இந்தத் துடிப்பு மிக்க இளைஞர்கள் வாழ்வு முடிந்துவிடப் போகிறதா என்ற ஏக்கமும் மனதில் அடித்துக் கொண்டது ! முன்னர் சொல்லியிருந்தபடி "வந்திட்டான்டா" என்ற குரல் கேட்டதும் எனக்கு அருகே இருந்தவர்கள் பொலித்தீன் பைகளில் கட்டி வைத்திருந்த பொருட்களை கடலில் வீசிவிட்டார்கள். படகு வேகமாகச் செல்லத் தொடங்கியது. படகின் வேகத்துக்கும் படகிலிருந்து பாய்ந்த ஏ.கே.

47 துப்பாக்கி வேட்டுகளுக்கும் ஈடு கொடுக்கமுடியாமல் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று கடற்படைப் பீரங்கிப் படகு திரும்பி ஓடியிருக்கவேண்டும். அதன் பின் அதன் சுவடே தெரியவில்லை.

நள்ளிரவில் எமது படகு கரைக்கு வந்தது. அங்கே எங்களை எதிர்பார்த்து சில இளைஞர்கள் காத்திருந்தனர். நடுக்கடலில் கடற்படையினரின் தாக்குதல் முயற்சி எனது நடுக்கத்தைப் போக்கி உடலில் சூடேற்றியிருந்தது ! இதனால் மைக்கேல் தந்த மருந்தை நான் உபயோகிக்க மறந்துவிட்டேன். கரைக்கு வந்ததும் அதை எடுத்துச் சிறிது பாவித்து விட்டுக் கடலில் வீசிவிட்டேன். கரையில் நின்ற இளைஞர்கள் ஒரு நிமிஷம் கூட வீணாக்காமல் மோட்டார்வானில் எங்களையும் மீதமிருந்த பொருள்களையும் ஏற்றினர். இரு மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் ஆயுதந்தரித்தவர்களாக வழிகாட்டிச் செல்ல எங்களை ஏற்றிக் கொண்ட மோட்டார் வான் ஒழுங்கைகள், வீதிகள் என்று வேகமாகச் சென்று ஒரு வீட்டு வாசலில் நின்றது. அங்கும் ஆயுதந்தாங்கிய இளைஞர்கள். இலங்கை இராணுவம் யாழ். வீதிகளில் நடமாடித் திரிந்த காலம் அது. மீண்டும் மோட்டார் வானில் என்னை வீட்டில் கொண்டுபோய் விட ஆலோசனை நடந்தது. பின்னர் மாற்று யோசனையின் படி இருவர் என்னை சைக்கிளில் கூட்டிச் சென்றனர். சென்னையில் பாலகுமாரன் சொன்னபடி நள்ளிரவு ஒரு மணியளவில் என்னை பவித்திரமாக வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தனர். ஆனால் நான் கொண்டு வந்த புத்தகங்கள் கொண்ட சிறிய பை கடலுக்குள் வீசப்பட்டு கைக்கு எட்டாமல் போய்விட்டது. இந்தப் பொருள்கள் கடலுக்குப் போய்விட்டன என்று வீட்டில் சொன்னபொழுது நீங்கள் உயிருடன் வந்ததே போதும்" என்று ஆறுதல் மூச்சுவிட்டார்கள்.

அந்த வீர இளைஞர்கள் வீரா, மோகன், மைக்கல் ஆகியோரைப் பின்னர் நான் சந்திக்கவே இல்லை. இனியும் சந்திக்கமுடியாது. அவர்கள் பின்னர் ஒரு

பயணத்தில் படகுடன் கடலில் காணாமல் போய் விட்டார்களாம் !

இந்தத் திகில் மிக்க அலைகடல் பயணம் எனது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு நிகழ்ச்சி தான். நான் சிறுவனாக இருந்தபோது எனது மூத்த தமையனாரின் (என் தந்தையின் முதல் தாரத்து மகன்) திருமணத்துக்குப் பெண் பார்க்க புங்குடுதீவுக்கு என்னையும் கூட்டிச் சென்றார். திருமணம் முடிந்து முதல் குழந்தை பிறக்கும் வரை நாங்கள் புங்குடுதீவுக்கும் அடிக்கடி பயணம் செய்திருக்கிறோம். இப்பொழுது போல் யாழ்ப்பாணத்தில் பஸ் ஏறி புங்குடுதீவில் போய் இறங்கமுடியாது. பண்ணைக் கடலில் படகில் சென்று மண்டைதீவுக்கரையில் இறங்கவேண்டும். மண்டைதீவுக்கும் வேலணைக் கடலுக்குமிடையில் ஒரேயொரு பஸ் மட்டும் சேவையிலிருந்தது. சில சமயம் இந்த பஸ் நோய்வாய்ப்பட்டு படுத்துவிடும்.

அது சுகமாக இருந்தாலும் அது மண்டைதீவு வந்து போவதற்குக் குறிப்பிட்ட நேரம் எதுவும் கிடையாது. இதனால் மண்டைதீவுக் கரையிலிருந்து வேலணைக் கரைவரை பகலில் வெய்யிலிலும் மழையிலும் இரவில் இருளிலும் நிலவிலும் நடந்தே செல்லவேண்டும். வழியில் ஈச்சமரங்களில் ஈச்சங்காய் பிடுங்கி பிடுங்கி விளையாட்டாகவே செல்வேன். புங்குடுதீவுக் கரையில் இறங்கி கிழக்கூருக்கு போவதானாலும் நடந்தே செல்லவேண்டும். புங்குடுதீவிலிருந்து நயினாதீவுக்கும் கோயிலுக்கும் செல்வோம். குறிகாட்டுவான் வரை நடை தான். மூன்று கடல் தாண்டி நயினாதீவுத் தலயாத்திரை !

1942 ஆம் ஆண்டு என்று ஞாபகம் புங்குடுதீவில் புகழ் பெற்ற வாணர் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் மற்றும் சிலரும் யாழ். நகரில் பள்ளிக்கூடத்துக்குப் படிக்க வந்த சமயத்தில் பாதையை இழுத்து வந்த யந்திரப் படகு பண்ணைக் கடலில் மூழ்கி அத்தனை பேரும் மாண்டனர். இந்தச் சோகம் யாழ்ப்பாணத்தையே துயரத்திலாழ்த்தியது. இதன் பின்னரே பண்ணைக் கடலிலும் புங்குடுதீவுக்

கடலிலும் றோட்டுப் போடும் வேலைகள் துரித மாக்கி முடிவடைந்தன.

சிறுவயதில் புங்குடுதீவுக்குச் சென்ற எனது கடல் பயணம் பின்னர் கச்சதீவுக்கும் சென்று கட்டுரைகள் எழுதத்தூண்டியது. இப்பொழுது அதாவது 1990 ஆம் ஆண்டில் நான் மேற்கொண்ட அகதிப் படகு யாத்திரை மேலும் பல அனுபவங்கள் கொண்டது. என் வாழ்க்கைப் பயணம் எப்பொழுது முடிவடையுமோ தெரியாது. அதுவரை எனது பயணங்கள் முடிவில்லாப் பயணங்களாகவே இருக்கும். அகதிப் பயணம் பற்றி மற்றொரு சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன்

(முற்றும்)

* 'முடிவில்லாப் பயணத்தில்... '
- எஸ். எம். கோபாலரத்தினம்
* (C) உரிமை : நூலாசிரியருக்கு
* முதற்பதிப்பு : ஆவணி 1992
* ஓவியம் : சேகர் - ஜெர்மனி
* வடிவமைப்பு: ரஜனி பதிப்பகம்
* அச்சுப்பதிப்பு : தமிழாலயம் - பாரிஸ்
போன் : 40 05 14 57
* வெளியீடு : ரஜனி பதிப்பகம்,
11, றூா றொடியர்,
75009 பாரிஸ், பிரான்ஸ்.

* MUDIVILLAPAYANTHIL
- By S. M. Gopalaratnam
* (c) S. M. Gopalaratnam
* First Edition : August 1992
Published by Rajani Kuhanathan,
RAJANI PATHIPAKAM,
11, rue Rodier,
75009 Paris, France.
Art by SEGAR - Germany.
Printed by THAMILALAYAM - Paris.
Phone : 40 05 14 57

[illegible]